சுருக்கம்

நில வருவாய் – நிலவரி சீர்திருத்தக்குழு – நிலவரி வசூல் செய்யும் முறையை எளிமைப்படுத்துதல்–நிலவரி சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை பரிசீலித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [வ.நி. 1 (1)] துறை

அரசாணை (நிலை) எண். 544

நாள் 20.10.2010
ஐப்பசி 3, திருவள்ளுவர்
ஆண்டு 2041.

படிக்கவும்:–

(1) அரசாணை (நிலை) எண்.223, வருவாய்த்துறை, நாள் 07.07.2009.

(2) முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.வ.நி 6(1)15583/2009, நாள் 6.5.2010 மற்றும் 9.7.2010.

●●●

ஆணை:–

2009–2010–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலவரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தவும், கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உரிய மாற்றங்கள் செய்யவும், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையினை சீரமைக்கவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் நிலவரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து அரசு ஆணை வெளியிட்டது. மேலும், இக்குழுவின் அறிக்கையை எதிர்நோக்கி 1419–ம் பசலி ஆண்டு முதல் [2009–2010] நிலவரியுடன் இணைத்து வசூலிக்கப்படும் தலவரி, தலமேல்வரி உட்பட ஏனைய வரிகள் நீக்கப்பட்டு நிலவரி மட்டும் புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு இரண்டு ரூபாயும், நன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ஐந்து ரூபாயும் வசூல் செய்யப்படும் எனவும் பார்வை ஒன்றில் அரசாணை வெளியிடப்பட்டது.

2. இக்குழு தனது அறிக்கைகளை பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதங்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பித்தது. இக்குழு பிற பரிந்துரைகளுடன், நிலவரி விதிப்பு மற்றும் நிலவரி வசூல் முறையை எளிமைப்படுத்துவது குறித்து பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளது:–

(i) தற்போது நிலஅளவு ஆவணங்கள் அனைத்தும் மெட்ரிக் முறையில் மாற்றப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் நிலவரி வசூல் முறையை எளிமைப்படுத்துவதற்காக 'ஏக்கர்/சென்ட்' கணக்கிற்கு பதிலாக 'எக்டேர்/ஏர்' கணக்கில் வரி விதிப்பு செய்யப்படுதல் வேண்டும். ஒரு எக்டேர் என்பது 2.47 ஏக்கர் ஆகும். எனவே 1 எக்டேர் புஞ்சை நிலத்திற்கு நிலவரியாக ரூ.4.94/– எனவும், 1 எக்டேர் நஞ்சை நிலத்திற்கு நிலவரியாக 12.35/– ரூபாயாகவும் வரி விரிவிதிப்பு நிர்ணயம் செய்யலாம், பரப்பளவுக்கு தகுந்தபடி குறைந்தபட்சமாக ரூ.1/– நிர்ணயித்து வசூல் செய்யலாம்.

(ii) தலவரி மற்றும் தலமேல்வரியை நீக்குதல் குறித்து ஏற்கனவே உரிய சட்டதிருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதால் இதனை ஏற்கலாம்.

த.பி.பா.

Scanned by CamScanner

3. நிலவரி சீர்த்திருத்தக் குழுவின் மேற்கண்ட பரிந்துரைகளை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) புஞ்சை நிலத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.5/-(ரூபாய் ஐந்து) வீதமும், நஞ்சை நிலத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.12/- (ரூபாய் பன்னிரண்டு) வீதமும் நிலவரியாக வசூலிக்கலாம் எனவும், பட்டா வாரியாக கணக்கிடப்படும் மொத்த தொகையை அருகிலுள்ள முழு ரூபாயாக கணக்கிட்டு கேட்பு நிர்ணயம் செய்யலாம் எனவும் ஆணையிடப்படுகிறது. மேலும் பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை ரூபாய் ஒன்று என நிர்ணயம் செய்யப்படுகிறது.

(ii) மேலும் நஞ்சைத்தரிசு மற்றும் புஞ்சைத்தரிசு உள்ளிட்ட புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வரும் விவசாயிகளிடம் வசூலிக்கப்படும் அடிப்படைத் தீர்வைக்குப் பதிலாக, எக்டேர் ஒன்றுக்கு ரூ.12/- (ரூபாய் பன்னிரண்டு மட்டும்) ஆக்ரமணத் (அடிப்படைத் தீர்வை) தீர்வையாக விதிக்கப்படுகிறது. இத்தகைய ஆக்கிரமிப்புகளில் ஆட்சேபகரமானவற்றை அகற்றிட தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், மேலும் நடைமுறையிலுள்ள விதிகளைப் பின்பற்றி இவற்றின்மீது உரிய அபராதமும் விதிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

4. இந்த நடைமுறையை 1419ம் பசலி ஆண்டு முதல் செயல்படுத்த வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்:</u>
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை-5
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை-5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர், சென்னை-5.
நிலச் சீர்த்திருத்த ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர் சென்னை-18/35.
<u>நகல்:</u>
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை-9.
பொதுப்பணித்துறை, சென்னை.9.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை-9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned by CamScanner

## சுருக்கம்

நில வருவாய் – நிலவரி சீர்திருத்தக்குழு – தீர்வை ஜாஸ்தி, பசலி ஜாஸ்தி ஆகியவற்றை நீக்கம் செய்வது மற்றும் தண்டதண்ணீர் வரியை நிர்ணயம் செய்வது, குறித்து நிலவரி சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை பரிசீலித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [வ.நி. 1 (1)] துறை

அரசாணை (நிலை) எண். 545

நாள்20.10.2010
ஐப்பசி 3, திருவள்ளுவர்
ஆண்டு 2041.

படிக்கவும்:–

(1) அரசாணை (நிலை) எண்.223, வருவாய்த்துறை, நாள் 07.07.2009.

(2) முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். வ.நி 6(1)15583/2009, நாள் 6.5.2010 மற்றும் 9.7.2010.

***

ஆணை:–

2009–2010–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலவரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தவும், கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உரிய மாற்றங்கள் செய்யவும், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையினை சீரமைக்கவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் நிலவரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து பார்வை ஒன்றில் அரசாணை வெளியிடப்பட்டது.

2. இக்குழு தனது அறிக்கைகளை பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதங்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பித்தது. இக்குழுவின் பல்வேறு பரிந்துரைகளுடன் தீர்வை ஜாஸ்தி, பசலி ஜாஸ்தி ஆகியவற்றை நீக்கம் செய்வது, தண்ட தண்ணீர் வரியை நிர்ணயம் செய்வது குறித்து பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளது:–

அ) பாசனப்பகுதியின் ஆயக்கட்டு அல்லாத பிற நிலங்களுக்கு, விவசாயிகள் விதிமுறைக்குப் புறம்பாக, அங்கீகரிக்கப்பட்ட ஆயக்கட்டுதாரர்களுக்கு சட்டப்பூர்வமாக கிடைக்க வேண்டிய நீரின் அளவைப் பாதிக்கும் வகையில், முறையற்ற நீர்ப்பாசனம் செய்வதைத் தடுப்பதற்கு, உரிய பிற நடவடிக்கையுடன் ஆண்டு ஒன்றிற்கு தண்டத் தீர்வையாக ஏக்கர் 1–க்கு குறைந்தபட்சம் ரூ.200/– (அல்லது) எக்டேர் 1–க்கு குறைந்தபட்சம் ரூ.500/– வசூல் செய்யலாம்.

ஆ) தீர்வை ஜாஸ்தி, மற்றும் பசலி ஜாஸ்தி போன்ற ஏனைய தீர்வைகளை நீக்கலாம்.

த.பி.பா.

Scanned by CamScanner

4.நிலவரி சீர்த்திருத்தக் குழுவின் இப்பரிந்துரையினை அரசு ஏற்றுக்கொண்டு தற்போது விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும் கூடுதல் தண்ணீர் வரியை (Additional Water Cess) நீக்கம் செய்து இதன் மூலம் ஆணையிடுகிறது.

5. இந்த நடைமுறையை 1420ம் பசலி ஆண்டு (2010 –11) முதல் செயல்படுத்த வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை–5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர், சென்னை–5.
நிலச் சீர்த்திருத்த ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர் சென்னை–18/35.
நகல்:
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை–9.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சேப்பாக்கம், சென்னை–5.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned by CamScanner

## சுருக்கம்

நில வருவாய் – நிலவரி சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை பரிசீலித்து கூடுதல் தண்ணீர் வரியை (Additional Water Cess) நீக்கம் செய்து அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [வ.நி. 1 (1)] துறை

அரசாணை (நிலை) எண். 546 நாள் 20.10.2010
ஐப்பசி 3, திருவள்ளுவர்
ஆண்டு 2041.

படிக்கவும்

(1) அரசாணை (நிலை) எண்.223, வருவாய்த்துறை, நாள் 07.07.2009.
(2) முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். வ.நி 6(1)15583/2009, நாள் 6.5.2010 மற்றும் 9.7.2010.

***

ஆணை:–

2009–2010–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலவரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தவும், கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உரிய மாற்றங்கள் செய்யவும், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையினை சீரமைக்கவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் நிலவரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து பார்வை ஒன்றில் அரசாணை வெளியிடப்பட்டது.

2. இக்குழு தனது அறிக்கைகளை பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதங்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பித்தது. இக்குழுவின் பல்வேறு பரிந்துரைகளுடன் கூடுதல் தண்ணீர் வரியை (Additional water Cess) நீக்குதல் குறித்து பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது:–

நன்செய் நிலங்களுக்கு பிற அனைத்து வரிகள் உட்பட சமச்சீராக ஏக்கர் ஒன்றிற்கு ரூ.5/–வீதம் (ரூபாய் ஐந்து) வசூலிக்கப்படவேண்டும் ' என அரசு ஆணையிட்டுள்ள நிலையில், கூடுதல் தண்ணீர் வரியினை வசூலிப்பதை நிறுத்தலாம்; இது தொடர்பாக பாசன நீர் உபயோகிப்பாளர் சங்கங்களுக்கும், நீர்வள ஆதார அமைப்பிற்கும் உரிய இழப்பீட்டுத் தொகை அரசால் வழங்கப்படலாம்.

3. குழுவின் இப்பரிந்துரையை அரசு கவனமாக ஆய்வு செய்தது. தண்ணீர் பகிர்மானத்தை பராமரிக்கும் தண்ணீர் உபயோகிப்பாளர் சங்கத்திற்கும் (Water Users Associations), நீர்வள ஆதார அமைப்பிற்கும் (Water Resources Organisation) வழங்குவதற்காக கூடுதல் தண்ணீர் தீர்வை வசூலிக்கப்படுகிறது. நன்செய் பயிர்களுக்கு முதல் மற்றும் இரண்டாம் தர ஆதாரங்களில் இருந்து செய்யப்படும் பாசனத்திற்கு, தற்போது ஒரு எக்டேருக்கு ரூ.175/– வீதம் கூடுதல் தண்ணீர் வரி வசூலிக்கப்படுகிறது. புன்செய் பயிர்களுக்கு முதல் மற்றும் இரண்டாம் தர ஆதாரங்களில் இருந்து செய்யப்படும் பாசனத்திற்கு ஒரு எக்டேருக்கு ரூ.150/– வீதம் கூடுதல் தண்ணீர் வரி வசூலிக்கப்படுகிறது.

த.பி.பா.

Scanned by CamScanner

4.நிலவரி சீர்த்திருத்தக் குழுவின் இப்பரிந்துரையினை அரசு ஏற்றுக்கொண்டு தற்போது விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும் கூடுதல் தண்ணீர் வரியை (Additional Water Cess) நீக்கம் செய்து இதன் மூலம் ஆணையிடுகிறது.

5. இந்த நடைமுறையை 1420ம் பசலி ஆண்டு (2010 –11) முதல் செயல்படுத்த வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை–5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர், சென்னை–5.
நிலச் சீர்த்திருத்த ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர் சென்னை–18/35.

நகல்:
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை–9.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சேப்பாக்கம், சென்னை–5.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned by CamScanner

சுருக்கம்

நில வருவாய் – நிலவரி சீர்திருத்தக்குழு– நிலவரி சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை பரிசீலித்து பாசன மேம்பாட்டு வரியை (Betterment Levy) நீக்கம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [வ.நி. 1 (1)] துறை

அரசாணை (நிலை) எண். 547

நாள் 20.10.2010
ஐப்பசி 3, திருவள்ளுவர்
ஆண்டு 2041.

படிக்கவும்:

(1) அரசாணை (நிலை) எண்.223, வருவாய்த்துறை, நாள் 07.07.2009.
(2) முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். வ.நி 6(1)15583/2009, நாள் 6.5.2010 மற்றும் 9.7.2010.

●●●

ஆணை:–

2009–2010–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலவரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தவும், கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உரிய மாற்றங்கள், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையினை சீரமைக்கவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் நிலவரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து பார்வை ஒன்றில் அரசாணை வெளியிடப்பட்டது.

2. இக்குழு தனது அறிக்கைகளை பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதங்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பித்தது. இக்குழுவின் பல்வேறு பரிந்துரைகளுடன் மேம்பாட்டு வரியை நீக்குவது குறித்து பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது:–

"நிலவரியைத் தவிர வேறு எந்த வரிச்சுமையையும் விவசாயிகளின் மீது சுமத்தப்படக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் பாசன மேம்பாட்டு வரியையும் ரத்து செய்யலாம்".

த.பி.பா.

Scanned by CamScanner

3. நிலவரி சீர்த்திருத்தக் குழுவின் பரிந்துரையை கவனமாகப் பரிசீலனை செய்து அதனை ஏற்று பாசன மேம்பாட்டு வரியினை (Betterment Levy) 1420-ஆம் பசலி ஆண்டிலிருந்து நீக்கம் செய்தும், 1419ம் ஆண்டு வரை வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ள பாசன மேம்பாட்டு வரியை தள்ளுபடி செய்தும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை-5
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை-5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர், சென்னை-5.
நிலச் சீர்த்திருத்த ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர் சென்னை-18/35.

<u>நகல்:</u>
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை-9.
பொதுப்பணித்துறை, சென்னை-9.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சேப்பாக்கம், சென்னை-5.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை-9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned by CamScanner

சுருக்கம்

நில வருவாய் – நிலவரி சீர்திருத்தக்குழு – வருவாய்த்தீர்வாயம் (ஜமாபந்தி) முறையை மறுபரிசீலனை செய்தல், மற்றும் கிராமக் கணக்குகளை எளிமைப்படுத்துதல் குறித்து நிலவரி சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை பரிசீலித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [வ.நி. 1(1)] துறை

அரசாணை (நிலை) எண். 548

நாள் 20.10.2010
ஐப்பசி 3, திருவள்ளுவர்
ஆண்டு 2041.

படிக்கவும்:

(1) அரசாணை (நிலை) எண்.223, வருவாய்த்துறை, நாள் 07.07.2009.
(2) முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். வ.நி 6(1)15583/2009, நாள் 6.5.2010 மற்றும் 9.7.2010.

***

ஆணை:–

2009–2010–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலவரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தவும், கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உரிய மாற்றங்கள், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையினை சீரமைக்கவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் நிலவரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து பார்வை ஒன்றில் அரசாணை வெளியிடப்பட்டது.

2. இக்குழு தனது அறிக்கைகளை பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதங்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பித்தது. இக்குழுவின் பல்வேறு பரிந்துரைகளுடன் வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையை மறு பரிசீலனை செய்தல், கிராமக்கணக்குகளை எளிமைப்படுத்துதல் மற்றும் பராமரிக்கப்படும் படிவங்களை மாற்றி அமைத்தல் குறித்து பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளது:–

(i) தற்போது உள்ள வருடாந்திர ஜமாபந்தி நடைமுறையையே தொடர்ந்து பின்பற்றலாம்; திருத்திய வருவாய்த் தீர்வாய சரிபார்த்தல் குறிப்பினை (Modified Jamabandhi check Memo) 1420ம் பசலி ஆண்டு முதல் கடைப்பிடிக்கலாம்;

(ii) கிராமக் கணக்குகளை எளிமைப்படுத்துவது தொடர்பாக, தொடர்ந்து பராமரிக்கப்படவேண்டிய கிராம கணக்குகள், நீக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள் மற்றும் திருத்தி அமைக்க வேண்டிய கிராமக் கணக்குகள் பின்வருமாறு:–

த.பி.பா.

Scanned by CamScanner

## அட்டவணை –1
## தொடர்ந்து பராமரிக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

| வ.எண். | கணக்கு எண். | கிராமக் கணக்கு விவரம் (பின்இணைப்பு IV) |
|---|---|---|
| 1. | -- | 'அ' பதிவேடு |
| 2 | -- | 'அ' பதிவேட்டின் உள்ளடக்கம் |
| 3. | 1 | பயிர் ஆய்வு கணக்கு |
| 4. | 1 | பயிர் ஆய்வு கணக்கின் சுருக்கம் |
| 5 | 2 | அடங்கல் |
| 6 | 2C | மரப்பதிவேடு (Tree Register) |
| 7 | 2D | பாசன ஆதார ரீதியான விபரப்பட்டி (Sourcewise irrigation statement) |
| 8 | 2F | பல்வேறு வகை நில வகுப்புகளின் பரப்புகளின் விபரப்பட்டி |
| 9 | 3 | பட்டா மாறுதல் (பிரிவு I,II,III, (ம) IV) |
| 10. | 4 | அரசிறைக் கழிவு விபரப்பட்டி |
| 11. | 5 (iii) | நிலவரி தள்ளுபடி கணக்கு [கணக்கு–5 என மாற்றி அமைக்கலாம்]. |
| 12 | 6 | முறையற்ற பாசனத்திற்கான தண்ணீர் தீர்வைகள் |
| 13 | 7 | பல்வகை வருவாய் |
| 14. | 10(1) | பட்டாவாரியான நிலவரித் திட்டத்தின் சிட்டா |
| 15 | 13 | கிராம வரிவசூல் கணக்கு |
| 16. | 14 | பட்டாவாரி வசூல் பதிவேடு |
| 17. | 15 | செலுத்துச்சீட்டுப் பதிவேடு |
| 18. | 18 | நில வருவாய் ரசீது |
| 19. | 19 | பிறப்பு/இறப்பு பதிவேடு |
| 20. | 20 | மழை பொழிவு பதிவேடு |
| 21. | 21 | கால்நடைப் பதிவேடு |
| 22. | 24 | சுரங்கங்கள் (ம) கனிமப் பொருட்கள் பதிவேடு |
| 23. | – | கிராம புள்ளியியல் பதிவேடு |

## அட்டவணை 2
## நீக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

| வ. எண் | கணக்கு எண் | கிராமக் கணக்கு விவரம் |
|---|---|---|
| 1. | 5(i) | நிலவரி தள்ளுபடி கணக்கு |
| 2. | 5(ii) | -- |
| 3. | 8A/8B | நீர்ப்பாசனக் கணக்கு |
| 4. | 9A | கூடுதல் தீர்வை (ம) கூடுதல் தண்ணீர் வரி கணக்குக்கு |
| 5. | 11 | பட்டா படிவம் |
| 6. | – | நன்செய் புன்செய் கழிவு கணக்கு |
| 7. | 16 | கிஸ்திபந்தி அறிக்கை |
| 8. | 17 | நில வருவாய் வட்டிப்பதிவேடு |
| 9. | 23 | பலவகை கைப்பற்றுகளின் எண்ணிக்கை பதிவேடு |

Scanned by CamScanner

## அட்டவணை -3
## திருத்தி அமைக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

| வ.எண். | கணக்கு எண். | கிராமக் கணக்கு விவரம் |
|---|---|---|
| 1 | 10 (II) | பட்டாவாரியாக விதிக்கப்படவேண்டிய தீர்வைப் பதிவேடு |
| 2 | 12 | கிராம நில வருவாய் சுருக்கப்பட்டி |

3. நிலவரி சீர்த்திருத்தக் குழுவின் பரிந்துரைகளை அரசு கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்று, பொது நலன் கருதி, திருத்தியமைக்கப்பட்ட கணக்கு நடைமுறைகளுடன் வருவாய்த்தீர்வாயம் (ஜமாபந்தி) முறையை தொடர வேண்டும் எனவும்; பின்வரும் அட்டவணை 1-ல் கண்டுள்ள கிராமக் கணக்குகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்றும்; அட்டவணை 2-ல் கண்டுள்ள கிராமக் கணக்குகளை நீக்கம் செய்தும்; அட்டவணை 3-ல் கண்டுள்ள கிராமக் கணக்குகளை உரிய திருத்தம் செய்ய அனுமதித்தும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

## அட்டவணை -1
## தொடர்ந்து பராமரிக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

| வ.எண். | கணக்கு எண். | கிராமக் கணக்கு விவரம் (பின்இணைப்பு IV) |
|---|---|---|
| 1. | -- | 'அ' பதிவேடு |
| 2 | -- | 'அ' பதிவேட்டின் உள்ளடக்கம் |
| 3. | 1 | பயிர் ஆய்வு கணக்கு |
| 4. | 1 | பயிர் ஆய்வு கணக்கின் சுருக்கம் |
| 5 | 2 | அடங்கல் |
| 6 | 2C | மரப்பதிவேடு (Tree Register) |
| 7 | 2D | பாசன ஆதார ரீதியான விவரப்பட்டி (Sourcewise irrigation statement) |
| 8 | 2F | பல்வேறு வகை நில வகுப்புகளின் பரப்புகளின் விவரப்பட்டி |
| 9 | 3 | பட்டா மாறுதல் (பிரிவு I,II,III, (ம) IV) |
| 10. | 4 | அரசிறைக் கழிவு விவரப்பட்டி |
| 11. | 5 (iii) | நிலவரி தள்ளுபடி கணக்கு [கணக்கு-5 என மாற்றி அமைக்க வேண்டும்]. |
| 12 | 6 | முறையற்ற பாசனத்திற்கான தண்ணீர் தீர்வைகள் |
| 13 | 7 | பல்வகை வருவாய் |
| 14. | 10(1) | பட்டாவாரியான நிலவரித் திட்டத்தின் சிட்டா |
| 15 | 13 | கிராம வரிவசூல் கணக்கு |
| 16. | 14 | பட்டாவாரியான வசூல் பதிவேடு 14 C உட்பட |
| 17. | 15 | செலுத்துச்சீட்டுப் பதிவேடு |
| 18. | 17 | நிலவருவாய் வட்டி பதிவேடு |
| 19. | 18 | நிலவருவாய் ரசீது |
| 20. | 19 | பிறப்பு இறப்பு பதிவேடு |
| 21. | 20 | மழை பொழிவு பதிவேடு |
| 22. | 21 | கால்நடைப் பதிவேடு |
| 23. | 24 | சுரங்கங்கள் மற்றும் கனிமப்பொருட்கள் பதிவேடு |
| 24 | - | கிராம புள்ளியியல் பதிவேடு |

Scanned by CamScanner

## அட்டவணை 2
## நீக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

| வ. எண் | கணக்கு எண் | கிராமக் கணக்கு விவரம் |
|---|---|---|
| 1. | 5(i) | நிலவரி தள்ளுபடி கணக்கு |
| 2. | 5(ii) | -- |
| 3. | 8A/8B | நீர்ப்பாசனக் கணக்கு |
| 4. | 9A | கூடுதல் தீர்வை (ம) கூடுதல் தண்ணீர் வரி கணக்குக்கு |
| 5. | 11 | பட்டா படிவம் |
| 6. | - | நன்செய் புன்செய் கழிவு கணக்கு |
| 7. | 16 | கிஸ்திபந்தி அறிக்கை |
| 8. | 23 | பயிரிடுவோர் பதிவேடு (சரகம்) |

## அட்டவணை -3
## திருத்தி அமைக்கப்படவேண்டிய கிராமக் கணக்குகள்

| வ.எண். | கணக்கு எண். | கிராமக் கணக்கு விவரம் |
|---|---|---|
| 1 | 10 (II) | பட்டாதாரர் பதிவேடு |
| 2 | 12 | கிராம கேட்பு (Demand) சுருக்கம் |
| 3. | - | வருவாய்த் தீர்வாய சரிபார்த்தல் குறிப்பு |

4. மேற்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்ட கிராமக் கணக்குகளை 1420ம் பசலி ஆண்டு (2010-11) முதல் செயல்படுத்திட ஆணையிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கி. தனவேல்,**
அரசு செயலாளர்.

**பெறுநர்:**
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை-5
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை-5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர், சென்னை-5.
நிலச் சீர்த்திருத்த ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர் சென்னை-18/35.

**நகல்:**
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை-9.
பொதுப்பணித்துறை, சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை-9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.

Scanned by CamScanner

நிதித்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned by CamScanner